# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au

**பேச்சுப்போட்டி 2021** **ஆண்டு ஏழு**

அனைவருக்கும் வணக்கம்

## இதிகாசங்கள்

இதிகாசம் என்பதன் பொருள் இப்படி முன்பு இருந்தது என்பதாகும். இதனைப் பழைய வரலாற்றைக் கூறும் நூல் என விரித்து நோக்கலாம். மகாபாரதம், இராமாயணம் என்பன இதிகாசங்களாகும். இதிகாசங்கள் மானுட விழுமியங்களை ஒழுங்குபடுத்திக் கூறுவன. வேதப் பொருளை நன்கு அறிய உதவும் நூல்களாகவும் உள்ளன.

வேத வியாசரால் பாடப்பட்ட மகாபாரதம் குருகுலத்தவரின் கதையைச் சொல்கின்றது. வால்மீகியால் பாடப்பட்ட இராமாயணம் சூரிய வம்சத்திலே தோன்றிய இராமபிரானுடைய கதையைக் கூறுகின்றது.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போர்பற்றி பாரதத்தில் கூறப்படுகின்றது. அறத்தின் வழிநின்ற பாண்டவர்கள் இன்னலுற்றபோது கண்ணன் அவர்களுக்கு உறுதுணையாக நின்று தருமத்தைக் காப்பாற்றுகிறார். போர்க்களத்தில் மனம்கலங்கி நின்ற அருச்சுனனுக்கு கண்ணன் செய்த உபதேசமே பகவத்கீதை ஆகும். பாரதத்தில் அறம் வென்று மறம் தோற்கின்றது. “அல்லன செய்தார்க்கு அறம் கூற்றமாகும்” என்ற உண்மையை பாரதம் வலியுறுத்துகின்றது.

காத்தற் கடவுளான விஷ்ணு இராமனாக அவதரித்து இராவணனை அழித்த கதையைச் சித்தரிப்பது இராமாயணம். இந்நூல் தீயன செய்தோர் அழிவர் என்பதையும், அறம் வெல்லும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இதிகாசங்கள் பொதுவாக மக்களின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்களாக அமைகின்றன. இன்ன காலத்தில் இன்ன செய்ய வேண்டும் என வழிவகை கூறுவனவாக உள்ளன. நல்லொழுக்கம், பொறுமை, நேர்மை, அஞ்சாமை, தியாகம், நற்பண்புகள் முதலியன முக்கியத்துவம் பெற்று படிப்போருக்கு நல்லறிவு ஊட்டி வழிகாட்டுகின்றன.

நன்றி
வணக்கம்